# கண்ணீர் விட்டே வளர்த்தோம்

கரும்பறவை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் போது, தென் தமிழீழப் பகுதிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகையில் சந்தித்த சம்பவங்கள், எதிர் கொண்ட நடவடிக்கைகள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன இங்கு நினைவு கூரப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த வேளையில் உணர்வுபூர்வமிக்கதான எங்களுடைய போராட்டத்தை விளக்குகின்றது இக்கட்டுரை.**

எப்படியோ மட்டக்களப்புக்குக் கொண்டு செல்வதற்கு ஆயுதம் கிடைத்து விட்டது. இரண்டு 45 ரக கழல் துப்பாக்கிகள் மட்டக்களப்புக்கு என ஒதுக்கப்பட்டு விட்டன. எங்கள் முகத்தில் பூரிப்பு. இதைக் கொண்டு செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து பிரான்ஸிஸ் யாழ்ப்பாணம் வந்திருந்தான்.

தற்போது புலிகளின் ஆதரவாளர்களாக இருப்போரை 'தடா' சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுவதாக மிரட்டிக் கொண்டிருக்கும் இந்திய அரசிடம் அப்போது (1983 இல்) பயிற்சி பெற்ற டேவிட் பயிற்சி முடித்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தான். இந்த இருவருடன் நானும் மட்டக்களப்புக்கு புறப்பட ஆயத்தமாயினேன். கூடியவரை மிதிவண்டியிலேயே செல்வது என்பது எமது திட்டம். மிதிவண்டியில் ஆகக் கூடியளவு மதவாச்சி வரைச் செல்ல முடியும். அதற்கப்பால் தொடர்ச்சியாக மிதிவண்டி ஓட்டுவது கடினம். இடையில் தங்குவது என்பதும் முடியாத காரியம். மதவாச்சிவரை காட்டுப்பாதைகளுக்கூடாகச் செல்வது எப்படி? இதற்கு தான் உதவுவதாக அப்போது போராளியாக இருந்த தவம் அண்ணை உறுதியளித்தார். 'அவ்வளவும் போதும் அதுக்கு மேல் நாங்கள் பாத்துக் கொள்ளுவோம்' என்று கூறினோம்.

இரு மிதிவண்டிகளில் எமது பிரயாணம் ஆரம்பமாகியது. நானும் டேவிட்டும் ஒரு மிதிவண்டியில் மற்றையதில் தவம் அண்ணையும் பிரான்ஸிசும். இன்று கொழும்புப் பாதையாகி விட்ட கொம்படிப் பாதை அந்தக் காலத்தில் ஆள் நடமாட்டமில்லாத இடம். இதனூடாகச் செல்லும் ஒவ்வொரு தடவையும் முள்ளுக் குத்தி மிதிவண்டிக்குக் காற்றுப் போய்விடும். அப்படியானால் இடையில் உதவியே 'கிடைக்க வாய்ப்பில்லை'. இதைக் கூட வந்தவர்களுக்குச் சொன்னேன். மிக அவதானமாகப் போனதால் மிதிவண்டிக்குக் காற்றுப் போகாத முதல் பயணமாக அது அமைந்தது. நாம் கிளிநொச்சியைச் சென்றடைந்தோம். அங்கு எமக்குத் தெரிந்த ஒரு இடத்தில் தங்கியிருந்தோம்.

பரந்தனில் சிவதாசன் என்ற துரோகிக்கு மரண தண்டனை வழங்குவதென்று ஏற்கனவே தீர்மானித்திருந்தோம். கிளிநொச்சிக்கு வந்த இடத்தில் அதனை நிறைவேற்றாமல் போனால், பின்னர் இப்பகுதிக்கு ஆயுதம் கொண்டு வரும்போது தான் நிறைவேற்ற முடியும். பெரும்பாலும் பரந்தன் சந்தியில் தான் சிவதாசன் நிற்பான். அப்பகுதியில் இராணுவ ரோந்து அடிக்கடி நிகழும். ஆனாலும், அதற்காக இதனைத் தள்ளிப் போட முடியாது. ஆகவே ஒரு தடவை இராணுவம் ரோந்து வந்து சென்றதும் உடனடியாக இதனை நிறைவேற்றுவதெனத் தீர்மானித்தோம். ஏனெனில், அடுத்த ரோந்துக்கு சிறிது நேரம் செல்லும். ஆனால் தண்டனையை நிறைவேற்ற போன அன்று நாம் எதிர்பார்த்த நேரத்திற்கு இராணுவம் வரவில்லை. இந்தத் துரோகிக்காக எமது பயணத்தை ஒத்திப் போடவும் முடியாது. எனவே, இப்போதே நிறைவேற்றுவோம் எனத் தீர்மானித்து அப்படியே செய்தோம்.

தண்டனையை நிறைவேற்றி விட்டு 150 யார் கூடச் சென்றிருக்க மாட்டோம். அதற்குள் இராணுவம் வந்து விட்டது. பரந்தன் சந்தியில் நின்ற எவருமே எம்மைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஆதலால் தப்பினோம்.

உடனடியாக இடத்தை மாற்றி வேறு இடத்தில் நிற்பதற்குரிய ஒழுங்குகளை அப்போதைய கிளிநொச்சிப் பிரதேசப் பொறுப்பாளராக விளங்கிய மாறன் செய்திருந்தார்.



"நான் அம்மாவை வீட்டில மட்டுமில்ல, எங்கேயும் சந்திக்க விரும்பயில்லை. நான் போராட்டத்தில இறங்கினதுக்குப் பிறகு அம்மா என்னை ஒரு கைதியாகத்தான் சந்திச்சிருக்கிறா. ஒரு வீரனாய்ப் பார்க்கயில்லை! அதால நான் இனி ஒரு பீ(F)ல்ட் செய்து அதில எடுத்த ஆயுதத்தைக் கொண்டு போய்த்தான் அம்மாவுக்கு முன்னால நிக்க வேணும்."

- பரமதேவா

அடுத்த நாள் எமது காட்டு வழிப் பயணம் ஆரம்பமானது. இடையில் ஒரு மிதிவண்டிக்குக் காற்றுப் போய் விட்டதால் நீண்ட நேர நடை. ஒருவாறு வவுனியா மாவட்டத்திற்குள் போய் விட்டோம். இதே வேளை யாழ்ப்பாணத்தில் அலன் தம்பதிகளைக் கடத்தியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் வேண்டுகோளின் (கட்டளையின்) பிரகாரம் அவர்களை அன்றைய தினம் விடுதலை செய்வதாகக் கூறியிருந்தது. ஆகவே அன்று வட பகுதியெங்கும் இராணுவம் தனது ரோந்தைத் தீவிரமாக்கியிருந்தது.

ஓமந்தையில் இருந்த அகதிகள் முகாமருகே நாம் சென்றபோது இரு இராணுவ வண்டிகள் வேகமாக எம்மைத் தாண்டிச் சென்றன. அதன் பின் எமது கோலத்தில் சற்று மாறுதல்கள் செய்தோம். அப்பாவிக் கிராமவாசி போல் தலைப்பாகை கட்டியிருந்தார் தவம் அண்ணை. சற்றுத் தூரம் சென்றதும் ஊர்ந்தபடியே இரு இராணுவ வண்டிகள் வந்தன. எமது இரு மிதிவண்டிகளுக்குமிடையில் அதிக தூர இடைவெளியிருந்தது. ஒவ்வொருவர் முகத்தையும் நன்றாக அவதானித்தனர். இராணுவத்தினர் யாராவது திருட்டு முழி முழித்திருந்தால் எமக்குச் சிக்கல் வந்திருக்கலாம். அதிர்ஷ்டவசமாக அப்படியேதும் நிகழவில்லை. நாம் பண்டாரிக்குளத்தைச் சென்றடைந்தோம்.

அங்கு எமது வேட்டு யாத்திரையின் அடுத்த கட்டம் பற்றித் தீர்மானித்தோம். புளொட் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்த 'தர்மே' என்ற சிங்களவனுக்கு மரண தண்டனை வழங்குவதென்று முடிவாயிற்று. அக்காலகட்டத்தில் வவுனியாவில் 'புளொட்' இயக்கமே எங்கும் நிறைந்திருந்தது. ஒரு சமயம் அவர்கள் வவுனியாவில் சிறிலங்கா விமானப் படையினர் மீது தாக்குதல் நடாத்தினார்கள். சிறிலங்காப் படையினரின் எதிர்த் தாக்குதல் தொடங்கியதும் தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவர்கள் பயத்தினால் ஓடி விட்டார்கள். ஓடும் போது ஒரு எல் எம் ஜியை அருகில் இருந்த ஒரு கடையின் பின்னால் சாக்கிற்குள் வைத்து விட்டார்கள்.

இத்தாக்குதலின் போது இராமநாதன் என்ற புளொட் உறுப்பினர் காயமடைந்திருந்தார். அவரைக் கூட கூட்டிக் கொண்டு போகவில்லை. அவரை இன்னொரு உறுப்பினரையும் கூட விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். எனவே அவர் இராமநாதனை மிதிவண்டியில் ஏற்றிக் கொண்டு காந்தீயம் பண்ணைக்குள் சென்றார். இவர்கள் இருவரையும் பின் தொடர்ந்தபடி வந்துகொண்டிருந்தான் தர்மே என்ற சிங்களவன்.

அவன் ஒரு வாடகைக் கார்ச் சாரதி. எல்லாவற்றையும் அவதானித்த அவன் சிறிலங்காக் காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தான். அவர்கள் அந்த இடத்திற்கு விரைந்தனர். உடனே மோதல் நடந்தது. இவர்களிடம் ஒரேயொரு கைத்துப்பாக்கிதான் இருந்தது. காப்பாற்றி வந்தவர் கொல்லப்பட்டார். காயமடைந்தவர் கைது செய்யப்பட்டார். அந்தக் காலத்தில் போராளிகளே தற்கொலை செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என புளொட் கூறியிருந்தது. பிற்காலத்தில் இது பற்றி சுவரொட்டியும் ஒட்டியிருந்தது. அதனாற்றான் இராமநாதன் கைதாக நேர்ந்தது. இதனால் வவுனியாவில் புளொட்டின் நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பலர் கைதாகினர்.

இந்தச் சம்பவத்தில் காட்டிக் கொடுத்த தர்மேக்கு தண்டனை வழங்குவதானால் மீண்டும் வவுனியா நகருக்குள் செல்ல வேண்டும். அந்த விசப்பரீட்சைக்கு புளொட் தயாராகவிருக்கவில்லை. எனவே அதை நாம் செய்யத் தீர்மானித்தோம். இதற்காகத் திட்டம் தீட்டினோம்.

வவுனியா நகருக்குள் செல்லும் ஒருவர் தர்மேயின் மோட்டார் வண்டியை வாடகைக்கு அமர்த்தி வருவதென்று முடிவாயிற்று. ஏற்கனவே அங்கு தங்கியிருந்த இராகுமான் இதற்கு முன் வந்தான். இரணை இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த இவன் பின்னர் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்தினான்.

ஒரு நாள் பிற்பகலில் இராகுமான் நகருக்குள் சென்றான். இராகுமான் புறப்படும் சமயம் 'நேர தர்மேயிடம் போய்க் கேட்காத. இரண்டு மூன்று கார்க்காரரிட்டை கேட்டைக் கதைக்க. பிறகு அது சுட்டாது எண்டதால் தர்மே விட்ட போற மாதிரி நடிக்காட்டி போகேக்கை [illegible] வாங்கு' என்று கூறியிருந்தோம். அதன் படி இராகுமான் வேறொரு வாடகை மோட்டார் வண்டிக்காரனிடம் போய் விசாரித்தான். பின்னர் தர்மேயிடம் போய்க் கேட்டான். மற்றவனிடம் விசாரித்ததை தர்மே பார்த்துக் கொண்டுதான் நின்றான். பின்னர் இராகுமான் அவனை அணுகி விசாரித்த போது அவன்

'நான் இப்பத்தான் நெருக்குளத்துக்குப் போட்டு வாறன். எனக்கு களைப்பாய் இருக்கு. நீ அதிலேயே போ' என்று அந்த மோட்டார் வண்டியின் கதவைத் திறந்து விட்டான். இராகுமானுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'பூசனிக்காய் வேண்ட வேணும். வேண்டிக் கொண்டு வாறன்' என்று சொல்லிவிட்டு வந்து விட்டான்.

இராகுமான் முதல்நாள் போன விசயம் பிழைத்து விட்டது. அன்று மோட்டார் வண்டியில் போகாததால் அடுத்த நாள் மறுபடியும் தர்மேயிடம் எப்படிப் போவது? எனவே வேறொருவரை அனுப்பத் தீர்மானித்தோம். தவம் அண்ணையின் நெருங்கிய உறவினன் ஒருவன் இதற்குச் சம்மதித்தான். பட்டாணிச்சூர் என்றுபிடித்திட்டு தர்மேயைக் கூட்டிக் கொண்டு வருவதாக முடிவாயிற்று. 'பீவி. எத்த வேணும் என்று சொல்லு. எப்படியும் கொண்டு வா. இல்லாட்டிப் பிறகு இதைச் செய்யேலாமல் போகும்' என்று சொல்லியிருந்தோம். அதன்படி அவன் தர்மேயைக் கூட்டிக் கொண்டு பட்டாணிச்சூருக்கு வந்தான்.

தர்மே கட்டுமஸ்தான தேகமுடையவன். மோட்டார் வண்டியை நிறுத்தியதும் இறங்கி வந்து தொலைக்காட்சியை ஏற்றுவதற்கு வசதியாக பின் டிக்கியைத் திறந்தான். தொலைக்காட்சிப் பெட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவன் விழிகள் கழல் துப்பாக்கியைக் கண்டதும் ஆச்சரியத்தால் அப்படியே நின்றன. விசயம் முடிந்தது. ஆனால் அவனது மோட்டார் வண்டியைக் கொண்டு போக முடியாது. ஏனென்றால் எம்மில் எவருக்குமே வாகனம் ஓட்டத் தெரியாது. அதனால் அனைவருமே மிதிவண்டியில்தான் தப்பிப் போக வேண்டியிருந்தது. நாம் தொடர்ந்தும் பயணம் போக வேண்டியவர்கள் என்பதால் நாம் தங்கியிருக்கும் இடம் தமது உறவினனுக்குக் கூடத் தெரியக் கூடாது என தவம் அண்ணை விரும்பினார். அதனால் வீதி வழியாக அவனை அனுப்பி விட்டு எம்மை வயல்களின் ஒற்றையடிப் பாதைகளூடாகக் கூட்டிக் கொண்டு போனார். களைத்துப் போய் நாம் ஒரு வீட்டிற்குள் சென்றோம். ஆனால் சிறிதுநேரத்தில் வீதி வழியாக முன்பே வந்து அவன் அங்கே கடையில் இருந்தான்.

'பார் நாங்கள் இவனுக்குத் தெரியக் கூடாதென்று இவ்வளவு கஷ்டப்பட்டு வர இவன் சுகமாக ரோட்டால இங்கை வந்திருக்கின்றான்' என்று நம்மிடம் சிரித்தார் தவம் அண்ணை.

எரிச்சலுடன் அங்கிருந்து பயணமானோம். திரும்பவும் வரம்புகள், ஒற்றையடிப் பாதைகள். அடுத்த இடத்திலும் இதே நிலைதான். அவனும்தான் என்ன செய்வது? நாங்கள் ஒவ்வொரு இடத்திலிருந்தும் செல்லச் செல்ல இந்த இடம் பாதுகாப்பாக இல்லையாக்கும் என நினைத்து அவனும் அங்கிருந்து செல்வான். அவன் அந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதால் அவனும் தான் தப்ப வேண்டும் என நினைப்பது இயல்பாயிற்று. கடைசியில் பாவற்குளத்துடன் எமது வாரோட்டம் நின்றது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

# கண்ணீர் விட்டே..

அன்று அங்குள்ள விகாரை ஒன்றில் ஏதோ நிகழ்ச்சி. அதற்காக மோட்டார் வண்டியில் ஒலி பெருக்கியினைப் பூட்டி விளம்பரம் செய்து கொண்டு வந்தார்கள். உள்ளே ஒரு புத்த பிக்குவும் இருந்தார். அந்த இடங்களிலெல்லாம் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று தவம் அண்ணர் சொன்னார்.



தவம் அண்ணரின் உறவினனை எமது பயணத்தில் தவிர்ப்பதை விட்டு இனிமேல் இணைத்துக் கொள்வதென்று தீர்மானித்தோம். அங்கிருந்து நேரியகுளம் சென்று பின்னர் பிரதான வீதி வழியாக மதவாச்சிப் பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தோம். இதற்கிடையில் மதவாச்சிக் காவல் நிலையம் இருந்தது. அதையும் தாண்டித்தான் அங்கு சென்றோம். மதவாச்சியில் எம்மை அனுப்பிவிட்டு தவம் அண்ணையும் அவரது உறவினரும் மிதிவண்டியிலேயே வவுனியாவுக்குத் திரும்பி விட்டனர். நானும் பிரான்ஸிசும் பேட்விட்டும் பயணத்தைத் தொடர்ந்தோம்.

எமது திட்டப்படி சிங்களப் பகுதிகளுக் கூடாகச் செல்லும் போது கூடியவரை முழுக்க முழுக்க சிங்களவரே பயணம் செய்யும் உள்ளூர் பேருந்துகளிலேயே போவதென்று முடிவெடுத்தோம். அதன்படி மதவாச்சியில் இருந்து அநுராதபுரம் போகும் பேருந்தில் பயணமானோம். அநுராதபுரத்திலிருந்து கதுருவலை வரை (பொலநறுவை) யாழ்-மட்டக்களப்பு பேருந்திலேயே பிரயாணமாக வேண்டியிருந்தது. அதற்கு மேல் போனால் ஓட்டமாவடிப் பாலத்தில் சிறிலங்காப் படையினரின் திடீர்ச் சோதனையில் சிக்க நேரிடும். எனவே பொலநறுவையில் இருந்து மட்டக்களப்புக்கு உதயதேவி புகையிரதத்தில் பயணமானோம். மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் இறங்கி மட்டக்களப்பு காவல் நிலையத்திற்கு அண்மையில் இருந்த ஒரு வீட்டிலேயே தங்கினோம். அங்கு பிரான்ஸிஸ் சொன்னான்.

'அப்பாடா! மட்டக்களப்புக்கு ஆயுதம் வந்தாட்டுது. இனித்தான் ரைபேசின்ட விளையாட்டுத் தொடங்கப் போகுது'

அந்த இரு கழல் துப்பாக்கிகளும் தான் மட்டக்களப்பு சிறையை உடைத்து நிர்மலா அக்காவை கொண்டு வருவதற்கு நாம் பயன்படுத்தியவை.

மட்டக்களப்பு சிறைச்சாலையை உடைத்து நிர்மலா அக்காவை மீட்டு வரும்போது அந்த இரு கழல் துப்பாக்கிகளுடனேயே யாழ்ப்பாணம் கொண்டு வந்தோம். கிட்டுவின் பொறுப்பில் நிர்மலா அக்காவை ஒப்படைத்ததும் பிரான்ஸிஸ் யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்து மூலம் மட்டக்களப்புக்குத் திரும்பி விட்டான்.

சில நாட்களின் பின்னர் மீண்டும் அடுத்த பயணம் ஆரம்பமாகியது. இந்தத் தடவை என்னுடன் தீசன் பயணமாகினான். இவனும் இந்தியப் பயிற்சி பெற்றவனே. இம்முறையும் மிதிவண்டியிலேயே போவதென்று தீர்மானித்தோம். ஆனால் முல்லைத்தீவிலிருந்து திருமலை சென்று அங்கிருந்து மட்டக்களப்புக்குப் போவதே எமது திட்டம். திருமலைக்குள்ளால் எம்மைக் கொண்டு செல்லும் பொறுப்பை சந்தோசம் ஏற்றிருந்தான். வன்னியில் மாத்தையாவைச் சந்தித்து அவர் மேற்கொள்ளும் தாக்குதல் ஒன்றில் பங்கு பற்றி விட்டுச் செல்வதென தீர்மானித்தோம். எப்படியும் அதில் ஆயுதம் கிடைக்கும். அதில் எமக்கும் கொஞ்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே அங்கு சென்றோம்.

மாத்தையா ஒட்டிசுட்டான் காவல் நிலையத்தின் மீதான தாக்குதலை மேற்கொள்ளத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்தார். அத்தாக்குதலில் பங்கு பற்றும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம். இறுதியாக அவருடன் சென்று அந்தக் காவல் நிலையத்தின் அமைப்பைப் பார்வையிட்டதும் அடுத்த நாள் (05.08.84) பிற்பகல் 5.30 மணிக்கு தாக்குதல் நடந்தது. இத்தாக்குதலில் பங்கு கொண்டவர்களில் மாத்தையா, குட்டி, வாசுதன், நான் ஆகியோரே இன்று இயக்கத்திலிருக்கின்றோம். அத் தாக்குதலில் பங்கு பற்றிய எட்வின், பசிலன், ரெஜி, லோறன்ஸ், சபா, பரமதேவா, சசி, மானா, சந்தோசம், சீலன் ஆகியோர் வெவ்வேறு தாக்குதல்களில் வீரச் சாவை எய்தி விட்டனர். (தீசன் அன்று என்னுடன் மட்டக்களப்புக்குப் பயணமாகியவன் ராமு, கோபி, சுகோதரம், பாபு முதலானோர் இன்று இயக்கத்தில் இல்லை.)

அத் தாக்குதலில் நான்கு உப இயந்திரத் துப்பாக்கிகள், மூன்று 303 றைபிள்கள், நான்கு றிப்பீட்டர்கள், இரண்டு 38 ரக கழல் துப்பாக்கிகள் ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

அதிரடிப் படையினர் தங்கியிருந்த விடுதிகள் தகர்க்கப்பட்டன. கணேமுல்லையைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முதியான்சே கோணமடுவ மற்றும் கிருஸ்ண சாந்தா, சமரவீர, விஜயரட்ண, விஜயானந்த ஆகிய படையினர் கொல்லப்பட்டதாக சிறீலங்கா அரசு அறிவித்தது. எமது தரப்பில் இழப்பெதுவும் இல்லை. சசி, வள்ளல், மானா, கோபி ஆகியோர் காயமடைந்தனர். இந்திய அரசிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் எமது சொந்த ஆயுதங்கள் மூலம் நடத்திய இரண்டாவது காவல் நிலையத் தாக்குதல் இதுவாகும்.

இத் தாக்குதல் முடிந்ததும் இரு உபஇயந்திரத் துப்பாக்கி, ஒரு கழல் துப்பாக்கி என்பவற்றை மாத்தையா எமக்கு வழங்கினார். அவருடன் நின்று மட்டக்களப்புக்கு தன்னை அனுப்பும்படி அவரை நச்சரித்துக் கொண்டு நின்ற பரமதேவாவையும் எம்முடன் அனுப்பி வைத்தார்.

பரமதேவா மட்டக்களப்பில் நிற்பதால் இயக்கத்திற்குப் பெரும் பலம். ஏனெனில், இந்தப் போராட்டத்தின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய உணர்வுள்ளவராக இனங்காணப்பட்ட அனைவருடனுமே பரமதேவாவுக்கு தொடர்பிருந்தது. இயக்கத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதில் பரமதேவாவுக்கு தனியானதொரு ஆற்றல் உண்டு. உணர்வு பூர்வமானவர்களுடன் தொடர்பு கொண்டு, போராட்டத்திற்கான பலமான அத்திவாரத்தைப் போட பரமதேவாவால் இயலும். எனவே பரமதேவா எம்முடன் வருவது குறித்து நாம் மகிழ்ச்சியடைந்தோம். சந்தோசம், தீசன், பரமதேவா, நான் ஆகிய நால்வரும் கொக்குத்தொடுவாய்க்குச் சென்று சசியின் வீட்டில் அறிமுகமாகிவிட்டு காட்டில் தங்கினோம். அதன்பின் எங்களுக்கு சசியின் வீட்டிலிருந்தே உணவு வந்தது. மீண்டும் எமது பயணம் ஆரம்பமாகியது. அதிக தூரம் மிதிவண்டியை உருட்டிக் கொண்டே போகவேண்டியிருந்தது. நெஞ்சுக்கு மேல் ஆழமுள்ள ஆற்றைக் கடந்தே தென்னமரவடிக்குச் சென்றோம். அப்பாடா! திருகோணமலை மாவட்டத்திற்குள் கால் வைத்துவிட்டோம் என்று எண்ணினோம். அங்கு சந்தோசம் தனக்கு அறிமுகமான ஒரு வீட்டிற்கு எங்களைக் கூட்டிக் கொண்டு சென்றான். அங்கே கிடைத்த செய்தி.

'பின்னேரம் தான் ஆமிக்காரர் வந்திட்டுப் போறாங்கள். நாளைக்கு காலையில வாறதா சொல்லிப் போட்டுப் போறாங்கள்' அவ்வளவுதான் உடனே அங்கிருந்து திரும்பிவிட்டோம். ஏற்கனவே சந்தோசம் தென்னமரவடியில் வைத்திருந்த 4 றிப்பிட்டர்களையும் கிளப்பிக் கொண்டு.

மீண்டும் மாத்தையாவைச் சந்தித்தோம். அவர் கடல்வழி மூலம் பயணமாகுமாறு கூறினார். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு சந்தோசத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவரை பரமதேவா, தீசன், நான் ஆகிய மூவரும் தங்கியிருப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுமாறு காண்டீபனிடம் கூறினார். காண்டீபனுடன் தங்கியிருந்த காலத்தில் குடியேற்ற வாசியான ஒரு சிங்களவனுக்கும் மரணதண்டனை வழங்கினோம். இவன் இராணுவத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவன். அந்த நெருக்கத்தினால் மண்ணின் சொந்தக்காரர்களுக்கு பல்வேறு வகையிலும் அச்சுறுத்தலாக விளங்கியவன். சில நாட்கள் சென்றதும் சந்தோசம் திரும்பி வந்தான். கடற்பயணத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டதாக கூறினான்.

கடமராட்சியிலிருந்து செம்மலைக்கு ஒரு வள்ளம் வந்தது. அந்த வள்ளத்தில் கலேன் வந்திருந்தான். எமது பயணத்தில் இணைந்து கொள்வதற்காகவே அவனும் வந்திருந்தான். வள்ளத்தை நிறுத்தக் கூடியபகுதியில் சிங்களவர்களின் வாடிகள் இருந்தன. ஆகவே அந்தப் பகுதிகளில் வள்ளத்தை நிறுத்த முடியவில்லை. கொந்தளிப்புள்ள கடற்பகுதியிலேயே வள்ளத்தை நிறுத்த வேண்டியிருந்தது. வள்ளத்திற்கும் கரைக்கும் இடையில் கயிறு மூலம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. கயிற்றில் பிடித்தபடி தீசன் வள்ளத்திலுள் ஏறினான். அவனது கையில் கழல்துப்பாக்கி இருந்தது. அடுத்து நான் வள்ளத்தில் ஏறினேன். உள்ளேயிருந்த கலேனைப் பார்த்து 'கலேன்... இதை வை' என்றபடி ஒரு பையினைக் கொடுத்தேன். அதற்குள் எனது ஏரக கழல்துப்பாக்கி இருந்தது. மறுகையில் உபஇயந்திரத் துப்பாக்கி இருந்தது. கலேன் எனது பையை வாங்கி உள்ளே வைத்ததுதான் தாமதம். பெரிய அலையொன்று வந்து அடித்தில் வள்ளம் கவிழ்ந்துவிட்டது. எல்லோரும் கடலில் மூழ்கிவிட்டோம். ஆழமான அக்கடல் பகுதியில் மூழ்கிய எம்மை மீனவர்கள் காப்பாற்றி விட்டார்கள். தீசன்தான் கடைசியாக மீட்கப்பட்டான். நீண்ட

துப்பாக்கி பையுடன் தவறிவிட்டது. சுமார் ஒன்றரை வருடத்திற்கு மேல் இக் கைத்துப்பாக்கியை நான் வைத்திருந்தேன். எனக்குமுன் கிட்டு இதனை வைத்திருந்தார். அதனால் அதை எடுக்காமல் போக எனக்கு மனம் வரவில்லை. ஆனால் எவ்வளவு தேடியும் அது கிடைக்கவில்லை. வள்ளம் திருமலைக்குப் புறப்பட்டது. திருமலையில் சந்தோசம் எதிர்பார்த்த இடத்தில் வரவேண்டியவர்கள் வரவில்லை. அதனால் வள்ளத்திலிருந்து கரைக்கு நீந்திச் சென்றான் சந்தோசம். நீண்ட நேரம் கடற்பிரயாணம் முழுமையாக நனைந்த நிலை. எனக்கு ஆஸ்த்மா தொடங்கிவிட்டது. எப்படியோ சந்தோசம் தன்னுடன் தொடர்புள்ளவனைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். நாம் திருமலை மண்ணில் கால் பதித்தோம். அங்கு நாம் தங்கியிருந்த வீட்டுக்காரரின் பாதுகாப்புக் கருதி அனைவரும் ஒரு அறைக்குள் முடங்கிக் கொண்டோம். அன்று எம்மைத் திருமலை மண்ணுக்கு கொண்டு சென்ற வள்ளத்தில் வந்த அன்பு, தீவன் இருவருமே இன்று வீரச்சாவெய்திவிட்டனர்.

மீண்டும் எமது கடல்வழிப் பயணம் ஆரம்பமாகியது. அதிகாலையில் மூதூருக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு இளங்கோ எம்மைச் சந்தித்தார். மூதூரிலிருந்து மட்டக்களப்புக்கு எம்மைக் கொண்டு செல்லும் பொறுப்பை இளங்கோவிடம் ஒப்படைத்தான் சந்தோசம். அக்காலத்தில் மூதூரில் எமக்குத் தொடர்புகள் குறைவு. [illegible] இயக்கமே எங்கும் நிறைந்திருந்தது. [illegible] ஆங்காங்கே வேறு சில இயக்கங்களும் இருந்தன. ஆனால் எமது நிலை இப்படியெல்லாம் குறிப்பிடக் கூடியதாகவில்லை. புலிகள் இல்லாததினால் அப்பகுதியைப் பற்றி [illegible] பெரிதாக கவனம் எடுக்கவில்லை. ஆதலால் முதன்முறையாக பகிரங்கமாக ஆயுதத்துடன் நாம் போகும்போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டியிருந்தது. அத்துடன் எந்த ஒரு இயக்க உறுப்பினர் பிடிபட்டாலும் முதன்முதலில் விசாரிப்பது புலிகளைப் பற்றித்தான். ஆகவே, எந்த இயக்க உறுப்பினருக்குத் தெரியாமல் இருப்பது தான் எமது முக்கிய தேவையாயிற்று. அதனால் கடைசியாக [illegible] குள்ளே பல நாட்களை நகர்த்தினோம். வெளியே போய்ப் பார்க்க வேண்டிய அலுவல்களை இளங்கோ கவனித்தார். அப்படியிருந்தும் [illegible] இயக்கத்தினர் எம்மை இனங்கண்டு கொண்டனர். அவர்களால் சில அசெளகரியங்கள் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டாலும் சமாளித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம். வழியில் பாதை மாறியதால் ஒரு மலையைச் சுற்றிவர நேர்ந்தது. சந்தோசமும், கலேனும் மூதூரி[illegible]



நேரம் கடலில் மூழ்கியும் அவன் வேலே நின்றனர்
தனது கைத்துப்பாக்கியை
கைவிடவில்லை. எனது கைத்

தொடர்ச்சி அடுத்த இதழில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# கண்ணீர் விட்டே வளர்த்தோம்

கரும்பறவை

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் போது, தென் தமிழீழப் பகுதிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகையில் சந்தித்த சம்பவங்கள், எதிர்கொண்ட நடவடிக்கைகள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன இங்கு நினைவு கூரப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த வேளையில் உணர்வுபூர்வமிக்கதான எங்களுடைய போராட்டத்தை விளக்குகின்றது இக்கட்டுரை.**

**சென்ற இதழ் தொடர்ச்சி**

ஈச்சிலம்பத்தையில் பரமதேவாவையும், தீசனையும் தங்க வைத்தோம். ஆயுதங்களையும் பகிர்ந்து கொண்டோம். ஏனெனில் எல்லோரும் ஒரேயடியாக பயணமாகும்போது வழியில் ஏதாவது நடந்தால் முழு ஆயுதமுமே போய்விடும். ஆகவே, ஒரு பகுதியினருக்கு ஏதாவது நடந்தாலும், மறுபகுதியினரின் ஆயுதங்களாவது மட்டக்களப்புக்கு போகவேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாக இருந்தோம்.

நானும் இளங்கோவும் மட்டக்களப்பு எல்லைக்குள் கால்வைத்தோம். நீண்ட நாட்களுக்கு முன்னரே நாம் புறப்பட்டுவிட்டோமாகையால் எமக்கு எவருடனும் தொலைத் தொடர்பு இருக்கவில்லை. மட்டக்களப்பு நிலமையும் தெரியாது. ஆகவே விடயம் தெரியாமல் எமது பழைய தொடர்புகள் இருந்த வீடுகளுக்குப்போகவும் முடியாது. ஆகவே தண்ணீரையும், சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு நான் தனியாகத் தங்கினேன். வெருகலுக்கும் வாகரைக்கும் இடையில் உள்ள சிறிய காட்டுப் பகுதியில் -சிறிய மலை ஒன்றில் நான் தங்கினேன். வாகரையில் இராணுவ முகாம் இருப்பதால் மிகவும் அவதானமாகவே இருக்கவேண்டியிருந்தது. இளங்கோ மட்டக்களப்பு நகரத்திற்குச் சென்று, நிலமையை அவதானித்த பின்னர் சந்திரண்ணாவை (காசி ஆனந்தனின் சகோதரர்) அழைத்து வந்தார்.

ஒரு அதிகாலைப் பொழுதில் எமது பயணம் மீண்டும் தொடர்ந்தது. வாகரை இராணுவ முகாமைத் தவிர்த்து பிரதான வீதியால் எமது பயணம் தொடர்ந்தது. இரு தடவைகள் ரோந்து சென்ற படையினரைச் சந்திக்க நேர்ந்தது.

மட்டக்களப்பு நகருக்குள் நாம் சென்றதன் பின்னர் இளங்கோவும், சந்திரண்ணரும் மீண்டும் ஈச்சம்பலத்தைக்குச் சென்றனர். பரமதேவாவையும், தீசனையும் சந்திரண்ணையுடன் அனுப்பி வைத்தார் இளங்கோ. உபஇயந்திரத் துப்பாக்கிகளும், றிப்பிட்டர்களும் மட்டக்களப்புக்கு வந்துவிட்டன.

இயக்கத்தில் இணைந்து பயிற்சிக்குப் போனவர்கள் பயிற்சி முடிந்து வந்ததும் பெற்றோரைச் சந்திக்க ஏற்பாடு செய்வது வழக்கம். ஆனால் பரமதேவாவின் விடயம் சிக்கலானது. பரமதேவா ஏற்கனவே மட்டக்களப்பில் பிரபல்யமானவர். இவர் வந்து நிக்கிறார் என்றால் படையினர் உசாராகிவிடுவார்கள். அதைவிட அவர் தாய் தங்கியிருந்த வீடு (இவரது சகோதரியினுடையது) மட்டக்களப்பு பிரதான முகாமிற்கு மிக அருகிலேயே இருந்தது. என்றாலும் சந்திப்பைத் தள்ளிப் போட முடியாது. பரமதேவாவை அணுகினேன். சிக்கலை அவருக்கு விளக்கினேன். இறுதியாக,

'அம்மாவை அங்கை போய்ச் சந்திக்கிறதெண்டாலும் சரி; இல்லாட்டி வேற வீட்டில சந்திக்க ஒழுங்கு செய்யிறதெண்டாலும் சரி... உங்கட விருப்பம் ' என்றேன்.

அதற்கு பரமதேவா கூறிய பதில், போராட்டத்தின் மீதும் தனது தாயின் மீதும் பரமதேவா வைத்திருந்த பாசத்தை தெளிவாக எடுத்துக் காட்டியது.

'நான் அம்மாவை வீட்டில மட்டுமில்ல, எங்கேயும் சந்திக்க விரும்பவில்லை. நான் போராட்டத்தில இறங்கினதுக்குப் பிறகு அம்மா என்னை ஒரு கைதியாகத் தான் சந்திச்சிருக்கிறா. ஒரு வீரனாய்ப் பார்க்கயில்லை! அதால நான் இனி ஒரு பீ(F)ல்ட் செய்து அதில எடுத்த ஆயுதத்தைக் கொண்டு போய்த்தான் அம்மாவுக்கு முன்னால நிக்க வேணும்.' எவ்வளவு வித்தியாசமானவன் இவன்?

ஆனால், அவனது கனவுகள்......

பரமதேவா சிறையிலிருந்து தப்பிய ஒரு வருடப் பூர்த்தி தினமான 22.09.1984 அன்று களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்தோம். கைக்குண்டெறிவதில் தேர்ச்சி பெற்ற சந்தோசம் இந்தத் தாக்குதலுக்கும் வரவழைக்கப்பட்டிருந்தான். திருநெல்வேலித் தாக்குதல், ஒட்டிசுட்டான் காவல் நிலையத் தாக்குதல் போன்ற தாக்குதல்கள் 'கைக்குண்டு எறிவதற்கு சந்தோசம்தான் சரியான ஆள்' என்ற நிலையை உருவாக்கியிருந்தன. (நாங்களே தயாரித்த கொழுக்கி எறிகுண்டுகள் தான் அப்போது நாங்கள் பாவிப்பது) இளங்கோவின் குழந்தைக்கு உடல் நலமில்லாததால் அத்தாக்குதலில் ஈடுபட இளங்கோவை நாம் அனுமதிக்கவில்லை. குழந்தையின் கவலைத்தைவிட தாக்குதலுக்கு தன்னை அனுமதிக்காததே பெரிய கவலையாகத் தெரிந்தது இளங்கோவுக்கு. காயமடைந்தவர்களை பராமரிக்க வேண்டுமென்பதற்காக சந்திரண்ணைக்கும் தாக்குதலில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. மொத்தம் 15 பேர் இத்தாக்குதலில் கலந்து கொண்டோம். இதில் சந்தோசம், பரமதேவா, யோகன், கடவுள், காந்தன், சார்ள்ஸ், ரவி, சிவம் அண்ணர், பிரான்சிஸ், டேவிட், தீசன், கணேஸ், நான் ஆகிய 13பேரே இயக்கத்தின் முழுநேர உறுப்பினர்கள். சாரதிகளாக வந்த இருவரும் ஆதரவாளர்களே. அதில் ஒருவர் திருமணம் செய்து இருவாரங்கள் கூட ஆகவில்லை. (இவர் பின்னர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.) நான்கு றிப்பிட்டர்கள், இரண்டு உபஇயந்திரத் துப்பாக்கிகள், இரண்டு சுழல்துப்பாக்கிகள், ஒரு வேட்டைத்துப்பாக்கி (ஒரு ஆதரவாளரிடம் பெற்றது) என்பனவே இத்தாக்குதலுக்கு நாம் கொண்டு சென்றவை. (இதிலும் ஒரு றிப்பிட்டர் வேலை செய்யவில்லை)

சண்டையிலதான் செத்தானெண்டு ஏனெண்டா அண்ணர் புளட்டில இருக்கிறார். அதால வேறமாதிரிக் கதை வரும். அதால அம்மாட்டைச் சொல்லுங்கோ-நான் சண்டையிலதான் செத்தனெண்டு".

வெற்றிகரமான தாக்குதல் ஒன்றின் பின்னால், அதில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் பெருமையுடன் தாயின்முன்னால் நிற்கவேண்டுமென்று கனவு கண்ட பரமதேவா அது நிறைவேறாதென்ற நிலையிலும் இயக்கத்தின் மீது பழிச்சொல் விழக்கூடாதே என்ற அவரது துடிப்பு இதைவிட இயக்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய அவரது கணிப்பீடு?

அந்தத் தாக்குதலின் விளைவாக கைப்பற்றப்பட்ட 303 றைபிளுக்கு 'ராஜூரவி'எனப் பெயரிட்டோம்.

. . . .

மட்டக்களப்புக்கும் மூதூருக்குமிடையிலான தொடர்புகளை இளங்கோவே கவனித்துக் கொள்வார் ஒருமுறை காட்டு வழியாக அவரும் காந்தனும் டேவிட்டும் செல்லும்போது வீதியமைப்பு தொடர்பான வேலைகளை மேற்கொள்ளும் சில சிங்கள உத்தியோகத்தர்களைக் கண்டுவிட்டனர். (புதிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளவே இவ்வீதியமைப்பு

பிறந்த பதினோராம் நாள். இந்தமுறை கட்டாயம் ஆட்கள் வருகிறார்கள். ஆயுதங்கள் வருகின்றன என யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு செய்தி கிடைத்தது.

ஏற்கனவே இரு தடவைகள் இவ்வாறு செய்தி வந்து மட்டக்களப்பிலிருந்து மூதூருக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பிவந்தவர் இளங்கோ. இந்த முறையும் கிடைக்குமென்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

இந்நிலையிலும் இளங்கோவைத் தான் அனுப்பவேண்டும். ஏற்கனவே போயிருந்தாலும் இளங்கோவுக்குத் தெரிந்த அளவுக்குச் சரியாக காட்டுப்பாதையைப் பிடிக்கமாட்டான் காந்தன். இந்த ஒரு தடவை போனால் சரியாகப் பிடித்துவிடுவான். ஆனபடியால் இந்தமுறை மட்டும் இளங்கோவை மூதூருக்கு அனுப்புவோம். இதுதான் கடைசித் தடவை. இனிமேல் காந்தன்தான் இந்த வேலைக்குப் பொறுப்பு என தீர்மானித்த நான் எனது தீர்மானத்தை இளங்கோவுக்குச் சொன்னேன். இளங்கோ காந்தனையும் கூட்டிக் கொண்டு மூதூருக்குப் புறப்பட்டார்.

தன்னியக்க றைபிள்களுடன் முதல் தொகுதிப் போராளிகள் மட்டக்களப்புக்குச் செல்லப் போகிறார்கள் எனவே 'வழியில் பிரச்சினையில்லை' என்பதை உறுதிப்படுத்திய பின்னரே அவர்



இத்தாக்குதல் நாம் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவையே கொடுத்தது. பரமதேவாவையும் ரவியையும் நாம் பறிகொடுக்க நேர்ந்தது. தாக்குதலின் ஆரம்பத்திலேயே ரவியும் பரமதேவாவும் காயமடைந்து விட்டனர். வலியினால் கத்திக் கொண்டிருந்த ரவியைத் தேற்றிக் கொண்டிருந்தார் பரமதேவா. 'பார்! எனக்கும் தான் காயம் உள்ளே போனவங்கள் வெற்றியோட வருவாங்கள் கொஞ்சம் பொறு' என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நேரஞ்செல்லச் செல்ல நிலமை மோசமாகவே இருவரும் தீர்மானித்து சயனைற் உட்கொண்டு விட்டனர். தாக்குதலை நிறுத்தி விட்டு நாம் பின்வாங்கும்போது இருவரையும் தூக்கப் போனோம். ரவி பேச்சு மூச்சற்றுக் கிடந்தான். அதைச் சொல்லத்தான் பரமதேவா உயிரோடு இருந்தாரோ?

'நாங்கள் ரெண்டு பேரும் கதைச்சு முடிவெடுத்து சயனைற் அடிச்சிட்டம். அதைவிட என்னையெல்லாம் உங்களால தூக்கமுடியாது. (அவர் கட்டுமஸ்தான தேகமுடையவர்) நீங்கள் எல்லோரும் தப்பிப்போங்கோ. எனக்காக ஒன்றுமட்டும் செய்யுங்கோ -அம்மாட்டைப் போய்ச் சொல்லுங்கோ உங்கட மகன்

திட்டமிடப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டக்களப்பு மாவட்டமும் திருமலை மாவட்டமும் சிங்களக் குடியேற்றத்தால் துண்டாடப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் இவர்களைக் காணவில்லை! இவர்கள் காட்டிற்குள் ஒழிந்து கொண்டனர் காலையிலிருந்து மாலைவரை அசையமுடியாத நிலை. சாப்பாடும் இல்லை. தண்ணீரும் இல்லை. கிளா என்ற காட்டுக்காயை மட்டும் சப்பிக் கொண்டு இருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து வரவிருக்கும் ஆயுதங்களையும் போராளிகளையும் மட்டக்களப்புக்கு கொண்டு வருவதற்காகவே இவ்வளவு சிக்கல் நிறைந்த பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. (இப்பாதையை இளங்கோவுக்கு அறிமுகப்படுத்தியவர் கிருமிச்சையைச் சேர்ந்த நல்லதம்பி என்பவர்) இந்நிலையில், 'எனக்கு பிள்ளை கிடைக்கப் போகுது வீட்டில எனக்கு அவளை விட்டா உதவி ஒண்டுமில்லை. அதால கொஞ்ச நாளைக்கு அவளைத் தார இடம் ஒண்டுக்கும் அனுப்பாதைங்கோ' என்று செய்தியனுப்பினார் ஜெயந்தி (இளங்கோவின் மனைவி). நானும் ஒப்புக் கொண்டேன். ஆனால் இளங்கோவின் மூன்றாவது பிள்ளை தேன்மொழி

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கைப்பற்றிய ஆயுதங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு -அம்பாறைப் பிரதேசத்திலிருந்தே பெறப்பட்டன. இன்று யாழ்ப்பாணம் கோட்டை எம்மால் விடுவிக்கப்பட்டிருக்கின்றதென்றால் மட்டக்களப்புப் போராளிகளும்தான் அதில் பங்காளிகள். மட்டக்களப்புப் போராளிகளும் அங்கு வீரச்சாவு அடைந்துள்ளார்கள்".

களை வெருகல் ஆற்றுக்கு (மட்டக்களப்பு -திருமலை எல்லை) அப்பால் கூட்டிக்கொண்டு போகவேண்டும் எனக்கருதிய இளங்கோ கஜேந்திரனுடன் ஒரு மிதிவண்டியில் வெருகலை நோக்கி வந்தார்.

வெருகலை அண்மித்தபோது தான் (ஒரு வளைவில்) துறைக்கு அப்பால் பேருந்து நிற்பதைக் கண்டார். உடனே 'எனக்கு சந்தேகமாய் இருக்கு. சைக்கிளைத் திருப்பு' என்று கஜேந்திரனிடம் கூறினார். கஜேந்திரன் சைக்கிளைத் திருப்பினான். சடசடவென வேட்டொலிகள் கேட்டன

தொடர்ச்சி்சிலம் பக்கம் ....

# அராலித்துறைச் சாதனைக்குப் பின்னால்...

கடந்த ஆவணி மாதம் 8ம் திகதி அராலித்துறையில் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி, வடபிராந்தியப் படைத்துறைத் தலைமைத் தளபதிகளான மேஜர். ஜெனரல் கொப்பேக்கடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளும் ஒரு இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இக்கண்ணிவெடித் தாக்குதலுக்கு உடனடியாகவே நாம் உரிமை கோரியிருந்தோம். ஆனால், அகற்றப்படாதிருந்த 'பழைய கண்ணிவெடி' ஒன்றில் சிக்கியே தமது தளபதிகள் உயிரிழந்தனர் என, சிறீலங்கா அரசு கூறியது. அதாவது, தீவகம் சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட முன்னர் புலிகளினால் அது



வீரவேங்கை புனிதன்
(நமசிவாயம் சிறிதரன்)
புங்குடுதீவு

புதைக்கப்பட்டிருந்தது என்றே, சிங்களப் படைகள் விளக்கமளிக்கின்றன.

ஆனால், சிங்கள அரசு கூறுவ



வீரவேங்கை
எல்லாளன் - நிசாந்தன்
(பொன்னுத்துரை தங்கத்துரை)
வேலணை மேற்கு

துபோல அது பழைய கண்ணிவெடி அல்ல.

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புக்குரிய முன்னேற்பாடுகளைச் சிங்கள இராணுவம் செய்யத்தொடங்கிய அண்மைக்காலத்திலேயே, இக்கண்ணியைப் புதைத்தோம்.

தீவகத்தைச்சூழ, சிங்களப் படை அமைத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களை ஊடுருவி உள்நுழைந்த எமது சிறப்பு வேவுப்பிரிவினர், இந்த வீரசாதனையைப் புரிந்தனர்.

இந்த உண்மையைச் சிங்களப் படைகளும் சிங்கள அரசும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தும், அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றன.

தமது பாதுகாப்பு அரண்களை ஊடுருவி, இந்த இராணுவ

சாதனையைப் புலிகள் செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாகக் கூற, வெட்கப்படுகின்றார்கள்.

ஆனாலும் இக்கண்ணியானது ஒரே தடவையில் அல்லது ஒரே நாளில் சுலபமாக புதைக்கப்பட்டதல்ல. பல இடர்கள் உயிரிழப்புக்கள் மத்தியில், பல நாட்கள், பல வேவு வீரர்களினால் பல இடங்கள் பரிசோதிக்கப்பட்டபின், பொருத்தமான ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கண்ணி புதைக்கப்பட்டது.

இக்கண்ணி புதைக்கப்படவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், வெறும் வெளியுமல்ல; தினமும் படையினர் பயணம் செய்யும் பாதையுமல்ல.



வீரவேங்கை - தமிழன்
(சிவராஜா புவனேந்திரன்)
வேலணை

ஏனெனில், இது சாதாரண சிப்பாய்களுக்காக வைக்கப்பட்ட கண்ணியல்ல.

படையெடுப்பை முன்னின்று



2-வது லெப்.
செம்பியன், கபால்
(பிரான்சிஸ் றொபின்சன்)
புங்குடுதீவு

வழிநடாத்த இருக்கும் முக்கிய உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு, வைக்கப்பட்ட கண்ணியாகும்.

இவ்விதம் ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து கண்ணியைப் புதைக்குமுன்னர், இதற்கான பணியில் ஈடுபட்ட ஐந்து போராளிகளை நாம் இழந்துள்ளோம். இவர்கள் வெவ்வேறு சம்பவங்களில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாட்களில் வீரச்சாவை அணைத்தனர்.

எல்லாளன், புனிதன் ஆகிய போராளிகள் 22-4-92 அன்று வேலணையிலும், தமிழன் என்ற போராளி 29-05-92 அன்று அராலி வெளியிலும், 2-வது லெப் செம்பியன், 2-வது லெப் அறிவழகன் ஆகிய போராளிகள் 15-06-92 அன்று ஊர்காவற்றுறையிலும் வீரச்சாவடைந்தனர்.

துணிகரமான இந்த இரகசியப்

பணியின்போது எதிரியின் கண்ணிகளில் பட்டு துப்பாக்கிக் குண்டேந்தியும், சயனைட் அருந்தியும் எதிரியின் வலயத்துக்குள்ளேயே இவர்கள் வீரச்சாவடைந்தனர். இவர்களது உடல்கள்கூட எதிரியிடமே சிக்கின.

இத்துணிகர வீரசாதனையைப் புரிந்த சிறப்பு வேவுப்பிரிவின் போராளிகளுக்கு, தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்ததுடன் எமது மக்களுக்கு அவர்களின் பெயர் விபரங்களைத் தெரியப்படுத்தினார்.

இவ்விதம் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடம்பெற்றுவிட்ட அராலித்து



2-வது லெப். அறிவழகன்
(ஜோசப் வின்சன்ட்)
இலந்தமோட்டை, மன்னார்

றைக் கண்ணிவெடியின் பின்னால் உயர்ந்த தியாகமும், மிகப் பெரிய வீரமும், துணிவும் அடங்கியுள்ளன ■

# கண்ணீர் விட்டே

இளங்கோ சந்தேகப்பட்ட மாதிரி அது இராணுவத்தினர் தான். ஏற்கனவே, பிரச்சினை வந்தால் எந்தப் பாதையால் ஓடவேண்டும் என்று கஜேந்திரனுக்கு கூறியிருந்தார். அவ்வழியே ஓடினான் கஜேந்திரன். களைத்துப் போன நிலையில் சயனைட்டைக் கடித்தான் (முழுமையாக விழுங்கவில்லை) அந்நிலையிலும் தப்பமுடியும் போல இருந்தது. முகாமுக்கு ஓடிவந்து விட்டான், முதலுதவியின்பின் காப்பாற்றப்பட்டு விட்டான்.
இளங்கோ காயமடைந்த நிலையில் உபஇயந்திரத் துப்பாக்கியை பாகம் பாகமாய்க் கழற்றி ஆற்றுக்குள் வீசினார் (வெருகல் ஆறு முதலைகள் நிறைந்தது). சட்டைப்பையில் இருந்த பணத்தை இராணுவத்தினர் பயன்படுத்த முடியாதவாறு கிழித்தெறிந்தார். (இளங்கோ கிளித்தெறிந்த நோட்டுக்கள் சில இன்னும் மூதூரில் உள்ளன). சயனைட்டை உட்கொண்டார்.

சயனைற் உட்கொண்ட நிலையில் இளங்கோ என்ன நினைத்திருப்பாரோ?

அப்போது 19 வயதே உள்ள தன்மனைவியையா? தனது மூன்று குழந்தைகளினதும் எதிர்காலத்தையா? முதன் முதல் மட்டக்களப்புக்கு றைபிள் வரும் போது அதை ஏந்திப் போரிடும் சந்தர்ப்பம் கிடைக்காமல் சாகிறேன் என்றா?

மூன்றாவதுதான் சரியென நான் திடமாக நினைக்கிறேன். இளங்கோவைப் பற்றிச் சரியாக அறிந்தவன் என்றவகையில். இளங்கோவைப் பற்றி நினைக்கும் போது விபரிக்கமுடியாத ஏதோவொரு உணர்ச்சி ஏற்படுகிறது. 'கொஞ்ச நாளைக்கு அவரைத் தூர இடம் ஒண்டுக்கும் அனுப்பாதேங்கோ என்டு சொன்னதைக் கேட்கேல்லை' என்று ஜெயந்தி உரத்துச் சொல்வது போன்ற ஒரு உணர்வு ஏற்படும்.

• • • •

இளங்கோவின் மரணம் பற்றிய செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து தான் மட்டக்களப்புக்குக் கிடைத்தது. அப்படியானால் காந்தன் எங்கே? ஏன் வராமல் நிற்கிறான்? துடித்துக் கொண்டிருந்தேன் நான். சில நாட்களின் பின் காந்தன் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். சம்பவம் நடந்த உடனே எங்களிடம் வராததற்காக அவனைக் கோபித்துக் கொண்டேன். 'எப்பிடிக் காக்கா வரமுடியும்? கடுமணலுக்க நடந்து காலெல்லாம் ஒரே கொப்புளம்!' என்றான் அவன். பின்னர் காந்தனிடம் போன போதுதான் இருகால்களையும் கவனித்தேன்-சுதந்திரத்துக்காக நாங்கள் கொடுக்கும் விலைதான் அந்தக் கொப்புளங்கள் என்று.

• • • •

இளங்கோவை இழந்ததற்காக பதிலடி கொடுக்க வேண்டுமென் றான் காந்தன். இளங்கோவை நாம் இழப்பதற்கு காரணமான வாகரை முகாம் இராணுவத்தினர் மீதே எமது முதல் தாக்குதல் (17-08-85 அன்று) நடைபெற்றது. எமக்கு ஒரு 7.56 ரக றைபிள் கிடைத்தது. மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின்னாளில் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த குமரப்பா இத்தாக்குதலுக்கு தலைமை தாங்கினார். ஏதோ ஒரு திருப்தி எமக்கு.

• • •

வளர்ந்து கொண்டே போனது எங்கள் தேசிய விடுதலைப் போராட்டம். மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி நிமால் டி. சில்வா உட்பட ஏராளமான படையினரை இழந்து சிறீலங்காப் படை. அவ்வாறே இந்தியப் படையும் மட்டக்களப்பில் கசப்பான பாடங்களைப் படித்தது.

தமிழ்த் தேசிய இராணுவத்தின் மீதான தாக்குதலின் முடிவில் கைப்பற்றப்பட்ட 50க்கு மேற்பட்ட கால்காஸ்ட்ரோ, 200க்கு மேற்பட்ட LMG , 2000க்கு மேற்பட்ட றைபிள்கள், ஏராளமான மோட்டார்கள் போன்ற ஆயுதங்களை ஏற்றுவதற்கு உழவு இயந்திரங்களும், பாரவண்டிகளும் (லொறி) தான் தேவைப்பட்டன என்ற செய்தியை அறிந்தபோது பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஒரேயொரு றைபிளை மட்டும் பெற்றுக்கொண்டது நினைவுக்கு வந்தது.
தொடர்ந்து சிறீலங்காப் படையினருடனான போர் தொடங்கிய போது (1990 யூன்) வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையிலான சகல காவல் நிலையங்களும் ஒரே இரவில் கைப்பற்றப்பட்ட செய்தி கிடைத்தது. அப்போது நாம் தென்தமிழீழத்தில் நடத்திய முதலாவது காவல்நிலையத் தாக்குதல் தான் நினைவுக்கு வந்தது. ஒரு காவல் நிலையத்தைக் கைப்பற்றவே ஆயுதங்களும் போராளிகளும் போதாமலிருந்த நாம் இன்று ஆயுதங்களின் தொகையில், ஆட்பலத்தில் பல்லாயிரமாக பெருகி நிற்பதை எண்ணி மகிழ்கிறேன்.
எமது போராட்டத்தின் வளர்ச்சி சிறீலங்காப் படையினர் மூலமாகவும் தெரிகிறது. அன்று (13-10-86) அடம்பனில் எம்மால் கைது செய்யப்பட்டு கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் சிறீலங்காவிடம் ஒப்படைக்கப்பட்ட (19-12-86) பாணந்துறையைச் சேர்ந்த அஜித் சந்திரசிறி இன்று (2-08-91) வடமுனையில் எமது தாக்குதலின் போது உயிரிழந்துள்ளான் (இத்தாக்குதலில் மொத்தம் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 20 றைபிள்கள் கைப்பற்றப்பட்டன.) இவனை பெரிதாகக் கௌரவித்துள்ளது சிறீலங்கா அரசு. இத்தாக்குதலில் எமது தரப்பில் எந்தவிதமான இழப்பும் இருக்கவில்லை. இது எமது வளர்ச்சியின் இன்னொரு எடுத்துக் காட்டு.
1990ம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் குமரப்பா, புலேந்திரன் முதலான பன்னிரு வேங்கைகளுக்கான அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அதில் நானும் கலந்து கொண்டேன். அன்று சிறுவர்களாக இருந்த பலர் அங்கு றைபிள்களைக் கட்டிக் கொண்டு போராளிகளாக நின்றனர். அந்தக் கூட்டத்தில் நிழட்டனும் பேசினார், 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கைப்பற்றிய ஆயுதங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு அம்பாறைப் பிரதேசத்திலிருந்தே பெறப்பட்டன. இன்று யாழ்ப்பாணம் கோட்டை எம்மால் விடுவிக்கப்பட்டிருக்கின்றதென்றால் மட்டக்களப்புப் போராளிகளும்தான் அதில் பங்காளிகள். மட்டக்களப்புப் போராளிகளும் அங்கு வீரச்சாவு அடைந்துள்ளார்கள். அதைவிட யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிப்பதற்கு பயன்படுத்திய ஆயுதங்களில் கணிசமானவை எம்மால் கைப்பற்றப்பட்டவையே.'

நான் அந்த இரு கைத்துப்பாக்கிகளையும் நினைத்துக் கொண்டேன். கூடவே இளங்கோவின் குழந்தைகளையும் காந்தனின் கொப்பளித்த பாதங்களையும். ■